Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 111/2023

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | ராமையா |
| Village | : | வடவாளம் |
| Religion | : | இந்து |
| Age | : | **54/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 02.04.2024**
(1, 2, 3, 4, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் இல்லை. 1, 2, 3, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் தற்போது வடவாளம் கிராமத்தில் வசித்து தவில் வித்வானாக பணி செய்கிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் அளித்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சுமார் **2 1/2** வருடங்களுக்கு முன்பு எனது வீட்டில் **40** வெள்ளாடுகள் வைத்து வளர்த்து வந்தேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் எனது **40** வெள்ளாடுகளை மேய்த்துவிட்டு வீட்டிற்கு வந்து எனது ஆடுகளுக்கு தண்ணீர் வைத்துவிட்டு இரவு சுமார் **10.00** மணிக்கு நான் தூங்க சென்றுவிட்டேன். மறுநாள் விடியற்காலை சுமார் **6.00** மணிக்கு எழுந்து பார்த்தபோது எனது **40** வெள்ளாடுகளில் **10** ஆடுகளை காணவில்லை. அதுபற்றி அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தேன். எங்கள் ஊரை சேர்ந்த ரமேஷ், மணிகண்டன் ஆகியோரை விசாரித்தபோது முன்தினம் இரவு **10.00** மணிக்குமேல் இருக்கும் **3137** என்ற பதிவெண் கொண்ட யுனோவா கார் சுற்றி கொண்டிருந்ததாக என்னிடம் சொன்னார்கள். அதனால் நான் யுனோவா காரில் சுற்றி திரிந்தவர்கள்தான் எனது ஆடுகளை திருடியிருப்பார்கள் என சந்தேகத்தின்பேரில் சம்மட்டிவிடுதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் மனு அ.சா.ஆ.**1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் விசாரித்து காணாமல் போன எனது **10** ஆடுகளை **2 1/2** மாதங்கள் கழித்து கண்டுபிடித்து கொடுத்தார்கள். இந்த நீதிமன்றத்தில் மனு செய்து ஆடுகளை பெற்று சென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைபடத்தில் உள்ள **(ஆர்.பி.எண்.90/2023)** ஆடுகள் காணாமல்போன எனது ஆடுகள்தான். சாட்சியின் **10** ஆடுகளை காண்பிக்கக்கூடிய புகைப்படம் அ.சா.ஆ. **2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எனது வீட்டினை சுற்றி 10,20 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு பின்புறம் வடக்கு பக்கத்தில் ஆடுகளை கட்டியிருந்தேன் என்றால் சரிதான். ஆடுகள் கட்டியிருந்த பக்கம் சுமார் 5,6 வீடுகள் உள்ளது. அ.சா.ஆ.1 புகார் மனுவினை யார் எழுதியது என்றால் உதவி ஆய்வாளர் எழுதினார். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது ஆடுகள் காணாமல் போனதாக கூறப்படும் சமயத்தில் யுனோவா கார் ஒன்று சுற்றி திரிந்ததாக நான் கேள்விப்பட்டேன் என சொல்வதில் உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் அளித்த போது போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

ம.வி.இல்லை